மின்னல் - 1 முழக்கம் - 4

# வான் முழக்கம்



## கடற்புலிகளின் பலம்




விலை 25/-

மாதாந்த பல்சுவை இதழ் ஒக்ரோபர்,நவம்பர் 2002



உறுதியும் உத்தரவாதமும் உள்ள
22 கரட் தங்க வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

# சாரங்கா நகைமாடம்

தொலைபேசி இல - 2480

177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# வேணி ரான்ஸ்போட் சேவிஸ்

165, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.



தொலைபேசி - 2046, 2661.

யாழ் மண்ணில் விளையும் பொருட்களையும் மற்றும் ஏனைய பொருட்களையும் கொழும்பிற்கு கொண்டுசென்று நீங்கள் குறிப்பிடும் இடங்களில் கொடுப்போம். பொருட்களிற்கு நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்.

## VENI TRANSPORT SERVICE

165, K.K.S., Road, Jaffna.

பசுவதை கொடிய பாவமாகும்.

# ஸ்ரீ நதியா நகை மாளிகை

## SRI NATHIYA NAGAI MALIGAI



அசல் 22 கரட்டில் குறித்த தவணையில்
நம்பிக்கையுடன் செய்து பெற்றிட
யாழ் நகரில் கஸ்தூரியார் வீதியில்
தலைசிறந்த ஸ்தாபனம்

அழகை நாடும் மங்கையர் நாடுவது

இல. 1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.021-2709
T.P. No.021-2709

No 1, Kasthuriyar Road,
Jaffna.

## உள்ளே....


1. கடற்புலி. . 02
2. தமிழவன். . 05
3. வாசகர் . . 06
4. மின்னல். . 07
5. நாற்சந்தி. . 09
8. அன்பு. . 11
9. உலகமய. . 14
10. பிரபஞ்ச . .18
11. பாபா . . 22
12. பொங்கு . .24
13. சோதனை. . 25
14. அன்னியனே. 26
15. பொது. . 27
16. வான்முழ . 28



**வான் முழக்கம்**

284 - பலாலி வீதி,

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல :3533


# ஆசிரியர் உள்ளத்தில் இருந்து ........

வான் முழக்கம் நான்காவது இதழ் ஊடாக உங்களுடன் உறவுப் பாலம் அமைப்பதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

சமாதானம் நிலவும் இந்த வேளையில் சமாதானம் தொடர்ச்சியாக நீடிக்க வேண்டும் என "**வான் முழக்கம்**" சமாதான தேவதைகளை வேண்டிக் கொள்கிறது.

யுத்தம் இல்லா சத்தம் இல்லா இந்த வேளையில் தென் இலங்கையில் இருந்தும் பெருமளவானோர் தமிழர் தாயகப் பகுதியிற்கு தினமும் வந்து செல்கிறார்கள். அவர்களில் தமிழ் தெரிந்த சிலரிடம் வான்முழக்கம் தவழ்ந்துள்ளது. அவர்களில் பலர் தொலைபேசியில் தங்களது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இதில் கண்டியைச் சேர்ந்த ஒரு வாசகர் இளம் சமுதாயத்திற்கு "**களம்**" அமைத்துக் கொடுப்பதில் வான்முழக்கத்தின் பணி ஆமை வேகத்தில் உள்ளது என ஆதங்கப்பட்டார். அவரின் ஆதங்கம் நியாயமானதுதான். ஆனால் எனிவரும் காலங்களில் இளம் எழுத்தாளர்களிற்கும் இலை மறை காய்களாய் இருக்கும் படைப்பாளிகளிற்கும் வான் முழக்கம் நிச்சயமாய் களம் அமைத்துக் கொடுக்கும். வான்முழக்க வளர்ச்சிக்கு கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறும் அன்பு உள்ளங்களிற்கு வான்முழக்கம் என்றும் நன்றியுடையதாய் இருக்கும். தொடர்ந்தும் விளம்பரதாரர்கள், வாசகர்கள், மாணவர்கள், அபிமானிகளின் ஆதரவுக் கரத்தினை நட்புடன் நாடி நிற்கிறது வான்முழக்கம். அத்துடன் வான்முழக்கத்தில் சந்தாதாரராக இணையவும் ஏற்பாடு செய்துள்ளோம்.

அன்புடன் ஆசிரியர்

**வே.தவச்செல்வம்**

# கடற் புலிகளின் பலம்

இலங்கைத்தீவில் சமாதான சூழ்நிலை காணப்பட்டாலும் கூட உலகின் பல பாகங்களில் உள்ள ராணுவ விமர்சகர்களும், ஊடகவியலாளர்களும் விடுதலைப் புலிகளின் பலத்தையும், அவர்களின் மதி நுட்பத்தையும் அறிவதில் ஆர்வம் காட்டுகின்ற போதும் இந்த இரண்டையும் அறிய முடியாமலேயே உள்ளது. இதைவிட விடுதலைப்புலிகளின் ஒவ்வொரு பிரிவின் செயற் பாடுகளும் உலகை வியக்க வைத்து வருகிறது. இவற்றில் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை, அரசியல் துறை, தமிழீழ காவற்துறை, தரைப்படை, விமான எதிர்ப்புப் பிரிவு, கடற்புலிகள் அணி என ஒரு நாட்டில் இருக்கக்கூடிய பாதுகாப்புக் கட்டமைப்பின் உயிர் நாடியான இப்பிரிவுகள் விடுதலைப்புலிகளிடம் பலமா கவே இருந்து வருகின்றது. இந்த பலத்திற்குரிய ஆளணியை மக்கள் வழங்க தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் ஒவ்வொரு பிரிவையும் வலுவூட்டி வளர்த்த தோடு மட்டும் நில்லாது தனது நேரடிக் கண்காணிப்பில் தொடர்ச்சியாக வளர்த்தும் வருகிறார்.

இத்தகைய வளர்ச்சியையும் கட்டுமான அமைப்பையும் உலகில் விடுதலைக்காக போராடுகின்ற வேறு எந்த ஒரு இயக்கமும் கொண்டிராத நிலையில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சி கண்டு கவலை அடைகின்ற உலக நாடுகள் சில விடுதலைப் புலிகளை நசுக்க வென இலங்கை அரசிற்கும் அதன் ஆயுதப் படைகளிற்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல்வேறு உதவிகளை வழங்கிய போதும் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியவில்லை. இதனை அடுத்து, அடுத்து என்ன செய்யலாம் என இலங்கை அரசும் அதன் உதவியாளர்களும் சிந்தித்த போதுதான் விடுதலைப் புலிகள் ஆனையிறவில் தொடங்கி சாவகச்சேரி வரை பல இராணுவ வெற்றிகளை ஈட்டினர். இதனைக் கண்டு உலகம் அதிர்ச்சி அடைந்தது. விடுதலைப்புலிகளின் பலத்தின் பயனாகவே தற்போது சமாதானப் பேச்சிற்கான காலம் கனிந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. தற்போது உலக இராணுவ ஆய்வாளர் களும் இலங்கையின் படைத் துறையும் கடற்புலிகள் தற்போது என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை அறிவதில் அதிக ஆர்வத்துடன் உள்ளனர். அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சின் முன்னேற்றம் கூட படைபலத்தின் பலத்திலேயே தங்கி உள்ளது. இதை எவரும் மறுக்க முடியாது.

இந்த நிலையில் தமிழரின் படைபலம் பலமாக இருப்பது யாவரும் அறிந்த உண்மை. ஆனால் பலத்திற் கான ஏனைய முக்கியமான படைத்துறை சார்ந்த காரணங் களை கண்டறிய முடியாம லேயே உள்ளது. குறிப்பாக கடற்புலிகள் அணியை எடுத்துக் கொண்டால் யுத்தம் இடம்பெற் றுக் கொண்டிருந்த காலப் பகுதியில் இலங்கையின் படைத்துறையினர் கடற் புலிகளின் அனைத்து செயற்பாடு களையும் கடலில் கட்டுப்படுத்தி விட்டோம் எனவும், எனிமேல் விடுதலைப் புலிகளிற்கு ஆயுதமோ, அல்லது மருந்து வகைகளோ உணவுப் பொருட்களோ வருகின்ற அனைத்து விநியோகப் பாதை களையும் கட்டுப்படுத்தி விட்டதாக படைத்துறைப் பேச்சாளர் கூறிய பின்னர் கூட கடற்புலிகளின் விநியோக நடவடிக்கைகளும், தாக்குதல் நடத்துகின்ற நடவடிக்கை களிலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக முன்னேற்றமே காணப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் நினைத்ததை நினைத்த நிமிடத்திலேயே சாதிக்கக் கூடிய நிலையிலேயே கடற்புலிகள் அணி இருந்து வருகிறது. கடற்புலிகளின் தளபதி கேணல் திரு.சூசையின் கடுமையான உழைப்பும், மன உறுதியும், விடாமுயற்சியும் கூட கடற்புலிகளின் வளர்ச்சியிற்கு பிரதான காரணமாக உள்ளது. எவருடனும் எந்த பேதமும் இன்றி எந்த வேளையும் புன்முறுவல் பூத்தபடி உரையாடக்கூடிய திரு.சூசை அவர்கள் கடல் சார்ந்த கடலையே நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்வியலிலும் மிகுந்த அக்கறையுடையவர். இந்த மக்கள் தொடர்ந்தும் பொருளாதார நலிவுடன் இருக்கக் கூடாது என்ற சிந்தனை உடைய திரு.சூசை படைத் துறையினருடன் மோதல் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது படைத்துறையின் கடற்படை யினரை குறிவைத்து தாக்கச் செல்கின்ற சந்தர்ப்பங்களில் நெருப்பாகவே இருப்பார் என போராளிகள் கூறுவர். ஒரு நிமிடத்தைக் கூட வீணாகச் செலவு செய்யாத திரு.சூசை எப்போதும் செயற்பாடு களிலேயே இருப்பார்.

இதை படைத்துறையினரும் ஓரளவிற்கு அறிந்திருக்கிறார்கள். சமாதானம் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் கடற்புலிகளின் செயற்பாடு எப்படி உள்ளது மீளவும் சில வேளை யுத்தம் தொடங்கினால் பெரும் தலையிடியை கொடுப்பவர்களும் விநியோக பாதைகளைத் துண்டாடி யுத்தத்தின் போக்கையே மாற்றக் கூடியவர் கள் கடற்புலிகள் என்பது படைத்துறையின் உயர்மட்ட அதிகாரிகளின் வாதமாகும்.

இதனால் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி கடற்படையை நவீனமயப்படுத்தி பலப்படுத்த வேண்டும் எனவும் கடற்படையினர்க்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும் எனவும் கடற்படையின் உயர் மட்டம் கடுமையான அழுத்தத்தை அரசிற்குக் கொடுத்து வருகிறது. கடற்படையினரின் கோரிக்கையை ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டதோடு மட்டும் நில்லாது விடுதலைப் புலிகளிற்கு எதிரான தீவிர போக்கை உடைய கடற்படை உயர் அதிகாரிகளை தொடர்ந்தும் அந்தப் பதவிகளிலேயே வைத்திருக்க முயற்சிக்கிறார். எப்படி முயற்சித்து கடற்படையை இலங்கை படைத்துறை பலப்படுத்தினாலும் எவராலும் கண்டறிய முடியாத பலத்துடன் இருக்கும் கடற்புலிகளின் பலத்திற்கு ஈடுகொடுப்பது கடினமாகவே இருக்கும். சமாதானம் வெற்றி கண்டால் இலங்கைக் கடற்படைக்கு அதிஷ்டம் தான்.

ஆ - ர்

"நம்முடைய உள்ளத்தில் விருப்பு
விரைவில் மாறுவதுபோல்,
வெறுப்பு விரைவில்
மாறுவதில்லை"

அன்பிற்கினிய வாசகர்களே ஊடகவியலாளர் நிமலராஜனின் ஞாபகார்த்த தினம் ஒக்டோபர் 19ம் திகதி அனுஸ்டிக்கபடவுள்ளதால் யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்துடன் இணைந்து வான்முழக்கம் நடத்தும் போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**போட்டி - 1 கட்டுரைப் போட்டி**

**தலைப்பு :**
**"ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள்"**

**போட்டி - 2 கவிதைப் போட்டி**

**தலைப்பு: "விடுதலை"**

**போட்டி -3 சிறுகதைப் போட்டி**

**தலைப்பு: "உறுதி"**

போட்டிகளில் எவரும் பங்குபற்றலாம். ஒருவர் மூன்று போட்டியிலும் கூடப் பங்குபற்ற முடியும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

போட்டி முடிவுத் திகதி:
~~15.10.2002.~~ 30.11.2002

ஆக்கங்கள் யாவும்
**பிரதம ஆசிரியர்,**
**வே. தவச்செல்வம்**
**284, பலாலி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்**
என்ற முகவரிக்கு
அனுப்பப்பட வேண்டும்.

# தமிழவன் கேள்வி பதில் பகுதி

**வ. கண்ணன்**
கிளிநொச்சி.

**கேள்வி :** பருத்தித்துறையில் உள்ள 524வது படையணித் தலைமையகத்துள் புகுந்து படையினரை வெளியேறுமாறு உணர்வுடன் பொங்கி எழுந்த மாணவர் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :** எங்கள் மண்ணை ஆக்கிரமித்தால் நெருப்பாகவும் மாறுவோம் எனக் காட்டியுள்ளனர். அமைதியாக எங்கள் மண்ணைவிட்டகன்றால் இத்தகைய விபரீதங்களை படையினர் தவிர்க்கலாம். தொடர்ந்தும் பிடிவாதமாக இருந்தால் நெருப்பாகவே மாறுவார்கள் மாணவர்கள்.

**வ. கவிதா**
யாழ் பல்கலைக்கழகம்

**கேள்வி :** தென் இலங்கையில் இருந்து குடாநாட்டிற்கு வருகின்ற உல்லாசப் பயணிகள் மாவீரர் துயிலும் இல்லங்களை நாடுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :** மாவீரர்களின் தியாகத்தை மதிக்கிறார்கள். இதைவிட இன்று ஏற்பட்ட சுமூகமான நிலை கூட மாவீரர்களின் தியாகத்தால் ஏற்பட்டது என்பதை உணர்கிறார்கள்.


**P.யாழினி**
நயினாதீவு.

**கேள்வி :** பெண்கள் 40 வயதை கடந்தாலும் இளம் பெண்களைப் பார்த்து பொறாமைப் படுகிறார்களே இது ஏன் தமிழவனே?

**பதில் :** இத்தகைய குணம் சில ஆண்களிடமும் உண்டு. 40 வயதில் பெண்கள் தாயாகிய நிலையில் இருந்தால் தனது குழந்தையாக உங்களை எண்ணி பொறாமைப்பட மாட்டார்கள். நீங்கள் குறிப்பிடும் பெண்கள் திருமணம் முடிக்காதவர்களாக இருக்கலாம் என நினைக்கிறேன்.

**K.கணேசமூர்த்தி**
வசாவிளான்.

**கேள்வி :** ஆண்கள் பெண்களிடம் சம உரிமை கேட்டுப் போராடும் காலம் வருமா தமிழவனே.




**பதில் :** வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

த.மனோ
திருகோணமலை.

**கேள்வி :** அரசு புலிகள் பேச்சு வெற்றி பெறுமா? தமிழரின் இலட்சியம் நிறைவேறுமா?

**பதில் :** தமிழரின் இலட்சியம் நிறைவேறுகின்ற தருணத்தில் அரசு புலிகள் பேச்சு வெற்றிபெறும்.

T.சத்யா
திருநெல்வேலி.

**கேள்வி :** தமிழவனே சில இடங்களில் கிராம அலுவலர்களிற்கு அரச அதிபரைவிட அதிகாரம் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதா?

**பதில் :** இத்தகைய குழப்பம் சில வேளைகளில் குடாநாட்டில் பலரிற்கு வருவதாகச் சுட்டிக் காட்டுகிறார்கள். இத்தகைய கிராம அலுவலர்கள் முட்டுகிறவர்களுடன். முட்டினால் இவர்களின் அதிகாரம் என்னவென்று விளங்கும்.

❖ சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது;
சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது;
ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது;
உண்மை குருட்டு நம்பிக்கையை
குழிதோண்டிப் புதைக்கிறது.

❖ உங்களுக்கு
எவ்வளவு தெரியும் என்பது
முக்கியமானதல்ல
உங்களுக்கு
தெரிந்ததைக் கொண்டு எவ்வளவு
செய்து முடித்தீர்கள்
என்பது தான் முக்கியமானது”

## வாசகர் கடிதம்

### வான் முழக்கம்

#### வானுயர....................

வான் மழையாய் வந்துதவும்
'வான் முழக்கம்' உனதுனக்கு
தேன் குழைத்த தெள்ளமுது
நான் ஊட்ட நயக்கின்றேன்.
அறிவியலும் அழகியலும்
அகிலத்துச் சேதிகளும்
குறைவின்றிப் பற்பலவும்
இறைபோலத் தருகின்றாய்
காலமெலாம் நீ வாழ்க
கோலமுடனே வாழ்க
ஞாலமாய் மக்களது
பாலமென நீ வாழ்க.

**வைர.வசீகரன்**
(க.பொ.த) உ.த,
கணிதப் பிரிவு (2004),
யா / விக்னேஸ்வராகல்லூரி,
கரவெட்டி.

### வாழ்க பல்கோடி ஆண்டுகள்

வான்முழக்கமே! வணக்கம்!
உனது சேவை
எம் இனத்திற்கு நிச்சயமாகத்
தொடர வேண்டும்
உன் தன்மான பணிக்கு எவராலும்
ஈடுகொடுக்க முடியாது
வாழ்க பல்கோடி ஆண்டுகள்.

அன்புடன்,
வான்முழக்க நேயர்,
**தி.யாழினி** (நயினை)

அன்பான வான்முழக்கமே! உனது ஓசை எங்கும் எதிரொலிக்கட்டும். உங்கள் மூன்றாவது இதழ்தான் எனக்குக் கிடைத்தது. அதிலுள்ள அம்சங்கள் யாவும் பிரமாதம். தொடர்ந்து வளமாக வெளிவர வாழ்த்துகிறேன்.

வாசகர்,
**எஸ்.நளினி**
மீசாலை வடக்கு,
மீசாலை.

# மின்னல்

❖ தமிழ் பண்பாட்டு உடையுடன் யாழ்ப்பாண மாநகரத்தை வலம் வருகின்ற மாநகர முதன் மையானவரை கூட்டான கட்சியின் காந்தியவாதிகள் தாக்கியதை யாரும் கவனத்தில் எடுக்கவில்லை என முதன்மையானவர் மனம் வெதும்புகிறார். முதன்மை யானவரும் கூட்டன கட்சியில் தான் இருக்கிறார்.

❖ 524வது படையணித் தலைமையகத்துள் புகுந்து தாங்கள் படையினரை வெளியேறுமாறு போராட்டம் நடத்தியபோது வன்முறை வேண்டாம் பாதை 3 தினங்களுக்குள் திறக்கப்படும் என வாக்குறுதி தந்த இந்தியத் திரைப்படங்களில் நடித்து அமரர் ஆன நடிகர் திலகத்தின் பெயர் கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர். ஏன் பாதை திறக்க நடவடிக்கை எடுக்க வில்லை என மாணவர்கள் கேட்கிறார்கள். விடை கொடுப்பாரா நாடாளுமன்ற உறுப்பினர்.

❖ தற்போது குடாநாட்டில் அமைதி நிலவுவதை அடுத்து அமைச்சர்மார், வர்த்தகர்கள், அரசியல் வாதிகள் எனப் பலர் வந்து செல்கிறார்கள். இந்த நிலையில் தன்னைத்தானே உத்தியோகபூர்வ பத்திரிகை என கூறி வருபவர்கள் தங்கள் பத்திரிகையின் பெயர் பொறித்த விளம்பர திரைச்சீலைக்கு முன்பாக விட்டு வருவோர் போவோரையெல்லாம் படம் எடுத்து அடுத்த நாள் பிரசுரிக்கத் தவறுவதில்லை. இறைவனே! சப்றா காசு எனியாவது கிடைக்குமா என இங்கு பலர் ஏங்குவது இவர்களுக்குத் தெரியாதா? அது சரி இப்பத்திரிகை அரசின் உத்தியோகபூர்வ பத்திரிகையா அல்லது வியாபாரத்தின் உத்தியோக பூர்வ பத்திரிகையா?

❖ சூரியமான பெயர் கொண்ட வானொலி ஒன்றின் செய்தியாளர் ராணுவ றக்குடன் மோதி மரண மடைந்ததாக சுடராக ஒளிவிடுகின்ற பத்திரிகை ஒன்றில் செய்தி வந்ததாம். உயிருடன் இருப்பவர்களை கொல்லுவதில் எத்தனை போட்டி பாருங்கள். முன்பொரு தடவை சூரியமான வானொலி நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தை இறந்த தாக வல்லவோ செய்தி சொன்னது. தற்போது செய்திகளை இயற்றுவதில் கடும் போட்டிதான் பாருங்கோ. அதற்கு உயிருடன் இருப்பவர் களை இறந்ததாக செய்தி வருவது பிழையல்லவோ.

❖ யாழ்ப்பாண அரச செயலகத் தில் உள்ள திட்டப் பணிப் பாளர் மகானானவர் கடும்

கவலையில் இருக்கிறார். முன்னர் அரிசியை மட்டும் நம்பி இராமல் வேறு எத்தனை துட்டுக்கள் எல்லாம் வந்தது. இப்ப அரிசியும் அடிக்கேலாத நிலை வருமோ என ஏக்கப் பெருமூச்சு விடுகிறார். அண்மையில் கச்சேரியில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத் திலை 7 வருடமாக புரிந்த ஊழல்களை எனிப் புரிய முடியாது என மகேஸ்வரன் எச்சரித்து விட்டார்.

❖ அண்மையில் யாழ்ப்பாணத் திற்கு தமிழ் விளையாட்டு வீரர் முத்தையா முரளிதரன் ஜனசக்தி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அழைத்துவரப்பட்டார். இதன்போது முரளிதரனை சந்திக்க ஜனசக்தி நிர்வாகம் சில பத்திரிகைகளிற்கு அனுமதி மறுத்து விட்டதாம். தனக்கு நெருக்கமான ஊடகங்களை மட்டுமே ஜனசக்தி முரளிதரனை சந்திக்க விட்டதாம். அது சரி ஜனசக்தி காப்புறுதியும் நெருக்கமானவர்களிற்கு மட்டுமா வழங்கப்படும்? எனச் சிலர் கேட்கினம். இதற்கு என்ன சொல்லுகினம் இவர்கள்?

# PROVERBS — பழமொழிகள்

❖ Where there is will there is way
மனமிருந்தால் மார்க்கமுண்டு.

❖ Knowledge is power
புத்திமான் பலவான்

❖ Little drops of water male a ocean
சிறு துளி பெரு வெள்ளம்

❖ Make hay while the sun shine
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

❖ Health is wealth
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

❖ Haste makes waste
பதறிய காரியம் சிதறிப் போடும்.

❖ Pride goes before a fall
தற்பெருமை தாழ்வை உண்டாக்கும்

❖ The face is index of mind
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

❖ Every tide has it's ebb
ஏற்றம் உண்டால் இறக்கும் உண்டாகும்.

❖ Leek before you leap
ஆழமறியாது காலை விடாதே.

❖ Enough is as good as a feast
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

❖ There is no smoke with out fire
நெருப்பின்றி புகையில்லை

❖ All that glitters is not gold
மின்னுவதெல்லாம் பொன் அல்ல

❖ A hungry man is an angry man
பசி வந்தால் பத்தும் பறக்கும்

அ.யோ.நிஷாந்தினி,
A/L 2003 (கலை)

# நாற்சந்தியிலே

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைவரிற்கும் படிப்படியாக தொலைபேசி இணைப்பு வழங்கப்படும் எனவும் இலங்கை ரெலிக்கொம் நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது எனவும் செய்தியிலை சொல்லிக்கொண்டிருக்க இந்தச் செய்தியைக் கேட்ட சந்தோசத்திலை அலுவலகத்தில் இருந்து இரவு சாப்பிடப் போனபோது நாற்சந்தியிலை இளசுகள் நிண்டுகொண்டு ரெலிபோனைப் பற்றி பெரிய விவாதமே நடத்திக்கொண்டு நிண்டினம். நானும் கிட்டப் போய் நிண்டு கேட்டுக்கொண்டு நிண்டன். தலைச்சுற்று வந்துவிடும் போல் இருந்தது. அதுகும் ஆதாரங்களோடை சில தகவல்களை இளசுகள் கதைச்சுதுகள் யாழ்ப்பாணத்திலை 1997ம் ஆண்டு 10ம் மாதம் 10ம் திகதி தொலைபேசி இணைப்பு வழங்கத் தொடங்கிச் சினமாம். இதிலை தியட்டர் காரரின்ரை சிபார்சும் படைத்துறையினரின்ரை சிபார்சும் கட்டாயம் தேவையாம். இந்தச் சிபார்சை பெற்ற பின்னர் ஒரு லட்சத்தில் இருந்து குறைந்தது 50 ஆயிரம் ஆவது என்பலப்பிலை மடிச்சு பொக்கற்றிலை மேலதிகமாய் கனகமான சூரியமானவரின் பொக்கற்றிலை வைச்சால் அடுத்த நாள் வீடு தேடிவந்து இணைப்பு பொருத்தப்பட்டு விடுமாம். இதைவிட வியாபாரம் என்ற போர்வையில் மக்களின்ரை பணத்தை கூடுதலாய்ச்



சுரண்டிக் கொள்ளை லாபம் அடித்த S.V.M. ற்கும் முன்னுரிமையாம். தீபாவளி காலத்திலை பயறு, உழுந்து, சக்கரை பதுக்கலில் முன்னோடிகள் இவர்கள்தானாம் என இளசுகள் விளாசிக்கொண்டே போச்சுதுகள். எங்கடை ரெலிக்கொம் கனகமான சூரியரைப் பற்றிக் கதைக்க கெட்ட கோபம் வந்தது எனக்கு நான் மனுசனோடை நேரடியாய் சனங்கள் இப்படியெல்லாம் பிழையாய் கதைக்குதுகள் உங்களை எண்டு ஒரு நாள் சொன்னனான். அப்ப அவர் எனக்குச் சொன்னதெல்லாம் நியாயமாய் இருந்தது எனக்கு. அவர் சொன்னதை வச்சுக்கொண்டு சந்தியிலை நிண்ட இளசுகளிற்கு விளக்கம் குடுத்தன். தம்பியவை சரியோ பிழையோ அந்த நேரம் மனுசன் எவ்வளவு சேவை செய்தது. இதைவிட மனுசன் ஒருத்

தரிட்டையும் தான் கைநீட்டி ஒண்டும் வாங்கிறது கிடையாதாம். ஆரும் சந்தோசத்திலை ஏதும் போத்திலை அல்லது என்பலப்பிலை ஏதும் கொண்டு போய் வைச்சால் அன்பு முறியாமல் இருக்கிறதுக்காய் ஏற்றுக்கொள்வாராம். இவ்வளவு தான், விசயம் எண்டனான்.

பிறகு கதையை விடுங்கள் எண்டு ப்ார்த்தன் விட்டால் தானே கேபிள் இணைப்பு - 1950ம் மோட்டறோலா - 1980 பொக்கறிலை வைச்ச பிறகுதான் வழங்கப்பட்டதாம். இதிலும் திருநெல்வேலியிலை சிவாவிற் கும் நெல்லியடியிலை பிள்ளை யாரிற்கும் விசேட கவனிப்பாம். இவர்கள் விசேடமாய் எல்லாரையும் கவனிக்கிறதிலை கெட்டிக்காறராம். கனகமான சூரியர் யாருக்குமே பயப்பிடாத மனுசன் கலியாண வீட்டைக் கூட கலகலப்பாய்தான் நடத்தினவர். எண்டதோடை முடிக்காமல் டயலொக் தொலைபேசி கொம்பனியின் திருகுதாளம் முதல் பாராளுமன்ற உறுப்பினர் மாரின் அரச அதிகாரிமாரின் தில்லுமுல்லுகளை அடுக்கிக் கொண்டே இருந்தார்கள். எனக்குப் பசிக்கத் தொடங்க இடையிலை விட்டுட்டு வந்திட்டன். இளசுகள் பிறகும் கூடுங்கள். அப்போது அவையின்ரை கதையளை உங்களோடை பகிர்கிறேன். அதுவரை பொறுத்திருங்கள்.

த.நெருப்பன்.

## கண்டுபிடிப்புக்கள்

◈ *கம்பியூட்டர்*
ஹோவர்ட் அட்சன்

◈ *விமானம்*
ஆர்வில வில்ப்ர்ரைட் சகோதரர்

◈ *ரேடியோ*
மார்க்கோனி

◈ *சினிமா*
ஜெ.லூமியர் & எ.லூமியர்

◈ *இன்சுலின்*
ஸர் பிரட்ரிக் பேன்டிங்க்

◈ *பென்சிலின்*
சேர்.அலெக்சாந்தர் பிளெமிங்

◈ *சைக்கிள்*
K.மேக்மில்லின்

◈ *கடிகாரம்*
A.L.ப்ரிகெட்

◈ *பரசூட்*
A.J.கெர்னரின்

◈ *மின்காந்தம்*
J.N.நிப்ஸி.

◈ *டைனமோ*
மைக்கேல் பாரடே

◈ *தையல் இயந்திரம்*
I.M.சிங்கர் / B.தம்மொன்னியர்

◈ *பலூன்*
ஜாக்யுஸ் & ஜோஸ்ப் மான்ட் கோல்பியர்

◈ *மின்தறி*
எட்மட்ண் கார்ட்ரைட்

◈ *பியானோ*
கிறிஸ்டோபரி

◈ *மூக்குக் கண்ணாடி* - வெனிஸ்
◈ *நீராவிக் கப்பல்* - J.C.பெரியர்
◈ *தீக்குச்சி* - J.E.லன்ட் ஸ்ரர்ம்

அ.யோ.சுதர்ஷன்.

**வான்முழக்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற சிறுகதை**

# அன்பு

அகிலத்தை ஆளும் ஆதவன் தன் கடமையை அதிகாலையில் தொடங்கினான். அவனுடைய பொன் மேனியிலிருந்து வீசும் பொற்கதிர்கள் அகிலத்திலுள்ள அனைத்து உயிரினங்களையும் உயிர்ப்பிக்கின்றன. ஆனால் பொன்னம்மா வீட்டில் மட்டும் மங்கிய மஞ்சள் ஒளிதான் தெரிகிறது. அவளோ கிணற்றடியின் அருகிலிருந்து தன் ஓரிரண்டு பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருக்கிறாள். வீட்டின் உள்ளே அந்த மங்கிய ஒளியில் அவள் மகன் சிவா ஊக்கத்துடன் படித்துக் கொண்டிருக்கிறான்.

பொன்னம்மாவின் குடும்பமும் சிவா பிறந்து பதின்மூன்று ஆண்டுகள் வரை மிகவும் சிறப்பாகத் தானிருந்தது. காரணம் அவள் கணவன் கந்தையாவின் உழைப்பிலும் பொன்னம்மாவின் சிக்கனத்திலும் சிறப்பாக இருந்தது. சிவாவின் பதின்மூன்று வயதில் அவனுடைய தந்தை கந்தையா மாரடைப்பு நோயால் இறைவனடி சேர்ந்தார். இந்த பேரிழப்பானது அவர்களின் குடும்பத்தையும் ஆட்டுவித்தது. பொன்னம்மா தனது சொத்துக்களையும், சொந்த பந்தங்களையும் இழந்து தனிமரமானாள். ஆனால் அவளுடைய உள்ளம் மட்டும் உறுதியாக இருந்தது. ஆம். அவளுடைய மகன், சிவாவை ஒரு வைத்தியனாக்க வேண்டுமென அவள் கனவு கண்டு இருந்தாள். அதை அவள் நனவாக்க தனது மனதை திடமாக்கி தனது மகனை தான் கூலி வேலை செய்து படிப்பித்தாள். ஆம் அவளுடைய முயற்சிக்குத் தக்க பலன் கிடைத்தது. ஏனெனில் சிவா தனது O/L பரீட்சையில் மிகவும் திறமையாகச் சித்தியடைந்து A/L பரீட்சையையும் மிகச் சிறப்பாகவும் செய்து அதில் அவன் சித்தியடைந்து நகரத்திலுள்ள மருத்துவ கல்லூரிக்கு மேற்படிப்புக்காகச் சென்றான்.

பொன்னம்மா தான் நினைத்தபடி தன் மகனை சிறந்த வைத்தியனாக்கிவிட்டேன் என எண்ணி மகிழ்ந்தாள். சிவாவும் தாயின் கனவுகளை நனவாக்கும் கதாநாயகன் போல் விளங்கினான். அவன் வைத்தியனாகி தனது சொந்த ஊருக்கே வைத்தியம் செய்து வந்தான். மேலும் அவன் கைராசியான வைத்தியன் எனவும் மக்களிடையே புகழ் பெற்றான்.

சிவாவின் கல்யாணம் பற்றி சிந்தித்திருந்த பொன்னம்மா காத்திருந்து கல்யாணப் பேச்சை ஆரம்பித்தாள். சிவாவும் தன்

தாய்க்கு சிரமமில்லாமல் அவ்வூரிலுள்ள பெரும் பணக்காரனின் மகள் செல்வியை காதலித்து அவளையே தனது துணைவியாகவும் தெரிவு செய்தான். அதைப் பொன்னம்மாவிடம் அவன் கூற அவளும் மகிழ்ந்து சம்மதித்தாள். தாயின் அனுமதி பெற்றதனால் அவனும் செல்வியின் பெற்றோரிடம் சென்று பெண் கேட்டு பின் மிகவும் விமர்சையாக அவனது திருமண வைபவமும் கொண்டாடப்பட்டது. பொன்னம்மா தனது பொறுப்பு அதாவது தன் கடமையை தான் செவ்வனே செய்து முடித்ததாக எண்ணி மனம் மகிழ்ந்தாள்.

இவ்வாறாக சிவாவின் வாழ்வும் இனிமையாகச் சென்று கொண்டிருந்தது. விதி யாரின் குடும்பத்தில் விளையாடவில்லை. ஆம். சிவாவின் குடும்பத்திலும் விதி விளையாட ஆரம்பித்தது. தாயின் சொல்லை மந்திரமாக மதித்த சிவா, இப்போது தாரத்தின் சொல்லை மந்திரமாக மதிக்கத் தொடங்கினான். மனைவி செல்வியின் சொற்படி ஆடினான். தாயை தன் வீட்டைவிட்டுத் துரத்தினான். மேலும் தன்னுடன் பொன்னம்மாவைக் கதைக்க வேண்டாம் எனவும் சந்திக்க வேண்டாம் எனவும் அழுத்தமாகக் கூறிப் பொன்னம்மாவை வீட்டை விட்டு அனுப்பினான். அவளும் தன் மகன்தானே என்று சொல்லிக் கொண்டு ஒன்றும் பேசாமல் வீட்டைவிட்டு வெளியேறினாள்.

இவ்வேளையில் சிவாவுக்கு இரட்டைக் குழந்தைகள், அவனதும் செல்வியினதும் காதல் பரிசாகக் கிடைத்தார்கள். இச்செய்திகைக் கூட அவன் பொன்னம்மாவிற்கு அனுப்பவில்லை. இதனை ஊர் மக்கள் மூலம் அறிந்த பொன்னம்மா மகிழ்ந்தாள். ஆனால் அவள் சிவாவிடம் செல்லவில்லை. ஏனெனில் தன் மகனது சொல்லை அந்தப் பெற்றதாய் பெரிதும் மதித்தாள். எனவே அவள் அங்கு செல்லவில்லை.

இவ்வாறாக வாழ்ந்து வரும் வேளையில் பொன்னம்மாவின் உடல் நோய்வாய்ப்பட்டது. அவளைக் கவனிக்க யாருமில்லை. அவள் கூலி வேலை செய்யும் இடத்தில் மயங்கி விழுந்தாள். அங்குள்ளவர்கள் அவளை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்று சிகிச்சை அளித்தார்கள். இச்செய்தியை சிவாவுக்கு அனுப்பிய போதும் அவன் தாயைப் பார்க்க வரவில்லை. பொன்னம்மா குணமடைந்தும் மீண்டும் தன் இயல்பு நிலையை அடைந்தாள். இப்படியே காலங்கள் உருண்டோடின.

இவ்வாறு வாழ்க்கை சக்கரம் நகர்ந்து செல்லத் தொடங்கியது. சிவாவின் வாழ்க்கையும் ஆட்டம் காணத் தொடங்கியது எனலாம். ஆம். சிவாவின் சிறுநீரகங்கள் பழுதடைந்துவிட்டன: அவனுக்கு சிறுநீரகங்கள் வழங்க அவன் மனைவி செல்வியோ, வேறு சொந்த பந்தங்களோ முன்வர வில்லை. இதனை அறிந்த பொன்னம்மா கன்றை இழந்த பசுப்போல துடிதுடித்து வைத்தியசாலைக்கு

ஓடிவந்து தனது மகனுக்கு தன் சிறுநீரகத்தில் ஒன்றை பொருத்தும்படி கூறி செயலிலும் இறங்கினாள். அவ்வேளையில் தான் சிவா தன் பிழையை உணர்ந்து, தன் தாயின் அன்பின் ஆழத்தையும், தூய்மையையும் அறிந்து பொன்னம்மாவிடம் மன்னிப்புக் கேட்டான். மேலும் பொன்னம்மாவைத் தன்னுடன் வந்து வசிக்கும்படியும் கேட்டுக்கொண்டான்.

தன் பேரக் குழந்தைகளின் மழலை மொழியைக் கேட்கும் ஆவலுடன் வந்த பொன்னம்மா கவனிக்கத் தவறியமையால் வேகமாகச் சென்ற பஸ்ஸில் மோதுண்டு இறந்தாள். அவ்வேளையிலும் அவள் "சிவா" என்னும் தன் மகனின் நாமத்தையே உச்சரித்தாள்.

"அன்பு என்றும் மறையாது, மலரும்"

ஆக்கம் : V.கௌரி,
சரவணை மேற்கு,
வேலணை.

---

**வான்முழக்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் வெற்றிபெற்றோருக்குரிய பரிசில்கள் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

**பரிசு பெற்றோர் விபரம்:**

**முதலாம் இடம்**
V.கௌரி
சரவணை மேற்கு,
வேலணை,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் இடம்**
நவரட்ணராசா தர்ஷினி
ஆண்டு - 10
கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

**மூன்றாம் இடம்**
த.சுரேஸ்
3ம் வருடம் கலைப்பிரிவு,
வவுனியா பல்கலைக்கழகம்.

சிறுகதைப் போட்டியில் பங்குபற்றிய மேலும் 10 பேரிற்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப் படுவதுடன் போட்டியில் பங்குபற்றிய அனைவரையும் வான் முழக்கம் மனதார வாழ்த்துகிறது.

## சோம்பேறி யார்?



ஒரு வேலையும் செய்யமால் கிடப்பவன் மட்டுமல்ல சோம்பேறி,

இப்போது செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும் சிறப்பாகப் பணியாற்றுவதற்குரிய திறமையும் வாய்ப்பும் இருந்தும், அப்படிச் செய்யாமல் இருக்கிறானே அவனும் சோம்பேறிதான்.

# உலகமயமாக்கலின் விளைவுகள்

1. சர்வதேச பொருளாதாரம் மற்றும் முதலீட்டுக்கு வழிவகை செய்யப்படுகிறது. இவற்றோடு உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளுக்கு குறைவான அழுத்தம் அளிக்கப்படுகிறது.
2. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஊக்குவிப்புக்கள்.
3. தனியார்மயமாக்கல் (Privatisation) இதனால் பொதுத் துறையைவிட தனியார் துறைக்கே அதிக முக்கியத்துவம்.
4. Denationalisarion - இது தேசிய மயமாக்கலுக்கு எதிர்ப்பதமாகும். இதன் மூலம் பொதுத் துறைப்பங்கு தனியார் துறைக்கு மாற்றப்படுகின்றன.
5. Deregulation விதிகளைத் தளர்த்துதல். இதன் மூலம் பொதுத் துறையின் களங்களில் தனியார் துறை நுழைகிறது.

உலகமயமாக்கலின் இன்னொரு முக்கிய அம்சம் தாராளமயமாக்கல் Liberalisation.

தாராளமயமாக்கல் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் தலையீடு மிகக் குறைவு.

சுதந்திரமான வர்த்தகமும் தங்குதடையற்ற தொழிற் போட்டியும் அனுமதிக்கப்படுகிறது. மொத்தத்தில் சந்தைதான் (Market) தீர்மானிக்கும் பொருளாகத் திகழ்கின்றது.

உலகமயமாக்கலின நன்மைகளாகக் கூறப்படுபவை.

1. அதிகமான உற்பத்தி
2. குறைந்த விலை
3. அளவுக்கு அதிகமான தேவை.
4. அதிகமான வேலை வாய்ப்பு

ஆக மொத்தத்தில் ஒட்டு மொத்தமாக பொருளாதார வளர்ச்சிக்கு உலகமயமாக்கல் அடி கோலுவதாக அதன் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

உலகமயமாக்கலின் இயக்குநர்கள்: உலக வங்கியும் (World Bank). சர்வதேச நிதி நிறுவனமும் (International Monetery Fund), உலகமயமாக்கலின் முக்கிய இயக்குநர்களாக திகழ்கின்றன.

ஏழை நாடுகளுக்கு, மூன்றாம் உலக நாடுகளுக்கு (Third World Countries) நிதியுதவி செய்யும் உலக வங்கியும், ஐ.எம்.எஃ.பும் அந்நிதியுதவியையே ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி அமெரிக்காவின் நலன்களுக்கு உகந்த பொருளாதாரக் கொள்கையை ஏழைநாடுகளின் மீது திணிக்கின்றன.

ஏழை நாடுகள் இதற்கு உடன்பட மறுத்தால் நிதியுதவி மறுப்பு என்ற மிரட்டல் விடப்படுகிறது. இறுதியில் உடன்படுவதைத் தவிர வேறு வழியேயில்லை என்ற நிலைதான் இந்நாடுகளுக்கு ஏற்படுகிறது.

உலகமயமாக்கலில் கருவிகள் GATT மற்றும் WTO நவீன உலகக் கட்டமைப்பில் GATT (வணிக மற்றும் வரிவிதிப்புப் பற்றிய பொது ஒப்பந்தம்), மற்றும் WTO (உலக வணிக கூட்டமைப்பு) ஆகியவை மிகவும் பரீச்சியமான வார்த்தைகளாக உள்ளன.

உலகமயமாக்கல் பொருளாதாரத்தை சர்வதேச அளவில் நடைமுறைப்படுத்தும் சட்டங்களாக GATT மற்றும் WTO ஆகியவை உள்ளன.

GATT இன் நோக்கம் உலகம் முழுவதும் உள்ள அரசாங்கங்களின் தலையீட்டைக் குறைத்து தனியார் துறை வர்த்தகத்தையும் தொழில்களையும் வளர்ப்பதாகும். GATT இன் உறுப்பு நாடுகள் அதன் கொள்கைகளுக் கும் விதிகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

GATT இன் அடிப்படை நோக்கம் உலகம் முழுவதும் சுதந்திரமான வர்த்தகத்தையும் தொழில்களையும் மேம்படுத்துவது ஆகும். ஆனால் அமெரிக்கா கனடா ஏனைய ஐரோப்பிய நாடுகள் ஆகியவை தங்களுக்கு உகந்த பொருளாதாரக் கொள்கைகளை GATT இல் சேர்த்துக் கொள்ள நிர்ப்பந்தம் செய்தன. தங்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொண்டு உலகம் முழுவதும் உள்ள வர்த்தக நடவடிக்கைகளை தங்களின் ஆதிக்கத்தில் கொண்டுவர GATT ஒப்பந்தத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தத் திட்டமிட்டன. விவசாயத் தொழிலைக் கூட விட்டுவைக்க அவர்கள் விரும்பவில்லை.

1995இல் GATT உலக வர்த்தக நிறுவனமாக (World Trade Organisation) மாற்றப்பட்டது. 135 நாடுகள் இதன் உறுப்பினர்கள் GATT ஐ அதிகமான அதிகாரங்கள் கொண்டது WOT ஆகும்.

உலக நீதிமன்றம் இருப்பது போல WOT உலக வர்த்தக நீதிமன்றம் போல் செயற்படுகின்றது. கட்டுப்படாத நாடுகளுக்குத் தண்டனையும் அளிக்கப்படுகிறது. இவ்வாறு வலுக் கட்டாயமாக உலகமயமாக்கல் ஏழை நாடுகள் மீது திணிக்கப்படுகிறது.

அமெரிக்க பொருளாதார நலன்களுக்கு உகந்தபடி வளரும் நாடுகள் செயற்படவில்லையானால் WTO இன் தண்டனை விதிகள் அந்நாடுகளின் மீது பாயும். உலக வங்கி யின் நிதியுதவி மறுக்கப்படும். உலகமயமாக்கல் இவ்வாறுதான் அமுல்படுத்தப்படுகிறது.

உலகமயமாக்கல் என்பது நாடுகளின் எல்லைகளை மீறி வரம்பில்லாத ஓர் வர்த்தகத் தளத்தை உருவாக்குவது ஆகும். இதன் விளைவாக முழு உலகையும் ஒரே உலகளாவிய கிராமமாக (Global Village) மாற்றுவதாக தங்குதடையின்றி முதலீடும், ஆட்பலமும், உற்பத்தி பொருளாகும் தொழில்நுட்பமும் உலகம் என்னும் கிராமத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லும். இதனால் வறுமை

ஒழிக்கப்படும். உற்பத்தி பெருகும். ஏழை நாடுகளுக்கும் நவீன தொழிநுட்பம் சென்றடையும். வேலைவாய்ப்பு அதிகரிக்கும். பசி, பட்டினி எல்லாம் மாயமாய் மறைந்துவிடும்.

பொருட்கள் நடமாட்டத்திற்கு போடப்படும் வரிகள் அனைத்தும் நீக்கப்படும். நுகர்வோருக்கு அவர்கள் விரும்பிய விருப்பமான பொருட்கள் சகாயவிலையில் கிடைக்க வழிபிறக்கும் என்றெல்லாம் உலகமயமாக்கலை ஆதரிப்போர் கூறிவருகின்றனர்.

உலகமயமாக்கல் என்பது ஏழை நாடுகளை மீண்டும் காலனிகளாக (அடிமை நாடுகளாக) மாற்றும் சதித்திட்டம் தான். G-8 எனப்படும் செல்வாக்கும், அதிகாரமும் படைத்த எட்டு நாடுகள் (அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்சு, ஜெர்மனி, இத்தாலி, யப்பான், ரஷ்யா) ஏழை நாடுகளை அடிமைப் படுத்தச் செய்யும் முயற்சிகளுக்குப் பெயர்தான் உலக மயமாக்கல்.

சென்ற காலங்களில் செல்வாக்கு மிக்க நாடுகள் ஆயுதங்கள் மூலம் மற்ற நாடுகளை அடிமைப்படுத்தின (ஏகாதிபத்தியம்). ஆனால் தற்போது ஆயுதமில்லாமல் நிதிநிறுவனங்கள், வங்கிகள், வர்த்தகம், தகவல் தொடர்பு, கல்வி, கலாச்சாரம் என்ற பெயரில் ஏழை நாடுகள் அடிமைப்படுத்தப்படுகின்றன.(நவீன ஏகாதிபத்தியம்) கடன் கொடுக்கிறோம் என்ற பெயரில் கோடிக்கணக்கான ஏழைநாட்டு மக்களின் ஆன்மா அடமானம் வைக்கப்படுகிறது. பெரும் பணத்துடன் ஏழை நாடுகளுக்கு வரும் பன்னாட்டு நிறுவனத்தின் வருகையால் உள்நாட்டு தொழில்கள் அழிந்து வருகின்றன. சிறுதொழில் நடத்துவோர், விவசாயிகள் முதலியோர் பன்னாட்டு நிறுவனத்துடன் போட்டி போட இயலாமல் முடங்கிவிட்டனர்.

உலகமயமாக்கல் வறுமை ஒழிக்கவல்லது என்ற வாதம் பொய்த்து ஏழைகளை மேலும் ஏழைகளாக, பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக உருவாக்கிவிட்டது.

இந்த உலகமயமாக்கலின் கொள்கை வகுப்பாளர்களும் அதனை நடைமுறைப்படுத்துபவர்களும் துாய்மையான எண்ண முடையவர்கள் அல்லர், இவர்கள் ஆதிக்க எண்ணம் கொண்டவர் கள். மனித நேய உணர்வும் இல்லாதவர்கள் என்பதில் சந்தேகமில்லை.

சோவியத் யூனியன் சிதைவுண்ட பிறகு அமெரிக்கா தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்வதற்கு வசதியாக உருவாக்கப்பட்டதே உலக மயமாக்கல் என்பது இன்றுடாலரு டன் தொடர்புடைய நெறிமுறை யாக விளங்குகிறது. மனிதனின் மனம், மனச்சாட்சி மற்றும் மனிதாபிமானத்திற்கும் உலகமயமாக்கலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லாத சூழலில் தான் உண்மை நிலையாக நிற்கிறது.

மிக ஏழ்மையான நாடுகளின் வரிசையின் கீழ் மட்டத்தில் இருக்கும் ஐந்து நாடுகளின் வருமானம் உலக வருமானத்தின் 2.3 சதவீதமாக இருந்தது. அது தற்போது 1.4% விகிதமாக குறைந்துள்ளது. . செல்வாக்கு மிக்க நாடுகளின் வரிசையில் முதல் ஐந்து இடத்திலுள்ள நாடுகளின் வருமானம் பெருகி வருகிறது.

வட்டி எனும் அரக்கன் இன்றைய உலக மயமாக்கலின் சூத்திரதாரியாகச் செயற்பட்டு ஒருபுறம் ஆசைகாட்டி ஏழை நாடுகளை கடனாளியாக்கிவிட்டு மறுபுறம் அந்நாடுகளை தனது கடும்பிடியில் சிக்கவைத்து ஆனந்தமடைவதும் இன்றைய உலகமயமாக்கலின் பிரிக்க முடியாத அம்சங்கள்தான்.

அனைத்தையும் மிஞ்சும் வகையில் உலகமயமாக்கலின் விளைவாக ஏற்பட்டுள்ள கலாசார சீரழிவுகளை நோக்கும்போது ஏழை நாடுகளில் மேற்கத்திய கலாசாரம் மற்றும் பண்பாடுகளை பரப்புவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் அந்நாடுகளின் கலாசர விழுமியங்கள் அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. அமெரிக்கா பல்தேசிய கொலிவுட் படங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் பாரிய பணத்தை சம்பாதிக் கின்றது.

பல்தேசிய நிறுவனங்களின் உற்பத்திகள் விரும்பியோ, விரும்பாமலோ, அனைத்து மக்களுடைய வாழ்க்கையிலும் கலந்து ஒன்றாக மாறிவிட்டன.

நாடுகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளையும் குற்றச் செயல்களையும் தூண்டிக் கொண்டிருப்பதுடன் உலக மயமாக்கல் இன்றைய வல்லாதிக்க நாடுகளை அதிகார ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மேலும் பலம் வாய்ந்ததாக மாற்றும் என்பதில் எவ்விதமான கருத்து முரண்பாட்டிற்கும் இடமில்லை.

## சொற்களின் பொருளைப் பகிர்ந்து கொள்வோம்

❖ **அரசியல்**

அ. **நாட்டை ஆட்சி புரியும் முறை :**
உதாரணமாக மக்களை நெறிப்படுத்தி, அவர்களுக்கு சேவை செய்வது அரசியல்.

ஆ. ஆட்சி செய்வது பற்றிய கட்சிகளின் கொள்கைகளும் நடைமுறைகளும் / கட்சி விவகாரம்.

❖ **அரசியல் வாய்ப்பு (பெயர்ச்சொல்)**

அரசியல் சட்டம், அரசின் கடமை, அதிகாரம், குடிமக்களின் உரிமை முதலியவற்றை வரையறுக்கும் அடிப்படைச் சட்டம்.

உதாரணமாக : சிறீலங்காவின் அரசியல் யாப்பின்படி, அந்நாட்டு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்கள் கொண்டவராவர்.

# பிரபஞ்சமும் மனிதனும்

## மனிதகுலத்தின் முன்னேற்றத்தில் — அக்கினி!

கருவிக் கையாளுகையில் கணணி வரை வந்துவிட்ட இன்றைய மனிதனின் முன்னோர்கள், அதாவது முற்றாக நிமிராதவர்களும், இருகாலில் இடம்பெயர்பவர்களுமான எமது மூதாதையர்கள் இருபது இலட்சம் ஆண்டுகளுக்கு முன் பட்டை தீட்டப்படாத கூழாங்கற்களைக் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள். இவை மிக எளிமையானவையாக இருந்த போதிலும் இறைச்சியை வெட்டிக் கிழிக்கவும் தாவரக் கிழங்குகளைக் கிண்டியெடுக்கவும் மிகவும் ஏற்றவையாய் இருந்தன. ஆபிரிக்காவிலேயே இம்மனிதர்களின் தொல்லியல் தடயங்கள் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டன. அத்துடன் இவர்கள் மலைக்குகைகள், மரப்பொந்துகள், மரங்கள் போன்ற இயற்கை வாழிடங்களிலேயே வாழ்ந்து வந்தார்கள். உடைகள் அணியாதோராயும் காணப்பட்டனர்.

சுமாராக இருபது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னரே மனிதர்கள் கூழாங்கற்களைக் கையிலேந்தத் தொடங்கிவிட்டார்கள் என்ற போதிலும், மிகச் சரியான அர்த்தத்தில் மனிதன் முதன் முதலில் கையில் ஏந்திய கருவிகள், தடிகளும், எலும்புகளும், கொம்புகளுமே.

ஆனால் கருவியென்ற வகையில் கற்கருவிகளே தொடர் வளர்ச்சிக்கு உரியன வாகையால் கல்லாயுதங்கள் முதன்மை பெற்றன.

இக்கால கட்டத்தில் மனிதன் அனைதத்துண்ணியாய் விளங்கினான். காய், கனிவகைகள், கிழங்கு வகைகள், வித்துக்கள், பூச்சிவகைகள், மாமிசவகைகளில் குறிப்பாக சிறுபிராணிகள் என்பனவற்றையும், மீன் போன்றவற்றையும் உண்ணலானான். மீன் சிறப்பாக கூறக்கூடிய அளவுக்கு அவனது உணவு வகைகளில் அளவுப் பரிமாணம் பெற்றிருக்கவில்லை. பின்னாளில் தீவிர உணவுப் பற்றாக்குறை ஏற்பட்ட நாட்களிலெல்லாம் அவன் நரமாமிச பட்சணியாகவும் கூட இருந்துள்ளான்.

கருவிகளின் நுண்ணாற்களினதும் இணைந்த வளர்ச்சிக்கு "கை" மூலகாரணமாக அமைந்தது. நடக்கும் தொழிலிருந்து கை விடுபட்டமையும், மனிதனுடைய கையிலுள்ள கை விடுபட்டமை யும், மனிதனுடைய கையிலுள்ள எதிரிடைப் பெருவிரலும், உடலின் ஏனைய ஒத்திசைவும், செயற்பாடுகளும்

இணைந்து கருவிகளைக் கையாள்வதையும், நுட்பத்திறன் வாய்ந்த செயற்பாடுகளை நிகழ்த்துவதையும் சாத்தியமாக்கின. இவை ஒன்றையொன்று பாதித்து தொடர் வளர்ச்சிக்கு உட்பட்டன.

முதல் மனிதன் அக்கினியைக் கண்டு அஞ்சினான். இயற்கையில் காடுகள் தீப்பற்றி எரிந்த போதும், எரிமலைகள் குமுறிவெடித்த போதும் அவன் அக்கினியைக் கண்டிருப்பான். ஆனால் அதனை அவன் தன் எதிரியாகவும், சுட்டெரிக்கும் பெரும் பூதமாகவும் மட்டுமே விளங்கிக் கொண்டான். இறுதியாய் மனிதன் எப்படி அக்கினியை உபயோகிக்க கற்றுக் கொண்டான் என்பதற்குத் திட்டவட்டமான சான்றுகள் எமக்குக் கிடைக்கவில்லை என்றாலும் கூட இயற்கையாகப் பற்றியெரிந்த காடுகளில் சிக்குண்டு வெந்துபோன மிருகங்களைப் புசித்த மனிதன், அக்கினியால் அது பதப்படுத்தப்பட்டதையும், சுவையூட்டப்பட்டதையும் அறிந்திருக்க கூடும். இந்நிகழ்வில் இருந்துதான் அக்கினியின் அனுகூலங்களைப் புரிந்து கொள்ளவும் அவன் ஆரம்பித்தான்.

இற்றைக்கு ஏறத்தாள ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலகட்டத்தில், "நிமிர்ந்த மனிதர்கள்" ஆபிரிக்கா, சீனா, யாவா உட்பட உலகின் பல்வேறுபட்ட பிராந்தியங்களில் வாழ்ந்தார்கள். இவர்கள், சிறந்த வெட்டு முகப்பரப்புக்களைக் கொண்ட வினைத்திறன் கூடிய கல்லாயுதங்களை, அதாவது கல் ஈட்டிகளையும், கற்கோடாரிகளையும், இரு கூர்முனைப் பரப்புடைய கத்திகளையும் பயன்படுத்தினார்கள். ஆனால், இக்காலகட்டத்தில் சீனாவில் உயிர் வாழ்ந்திருந்த நிமிர்ந்த மனிதர்களாலேயே மனித குலத்தின் மிகப் புரட்சிகரமான சாதனையாகிய நெருப்பின் பயன்பாடு அறிந்து கொள்ளப்பட்டது. நெருப்பினை சீன மனிதர்கள் ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் கிரமமாய்ப் பயன்படுத்தி வந்ததற்கான தடயங்களும், நெருப்பில் வாட்டி உண்ட மீன்களின் மீதி எலும்புகளும் பெய்ஜிங்கிற்கு அணித்தாயுள்ள குகையொன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதுவே பின்னாளில் மனித குலம் பிரமாண்டமான ஆற்றல்களையெல்லாம் தம்வசப்படுத்திய நிகழ்வுகளின் தொடக்க இடமாகும்.

நெருப்பைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டதுடன், மனிதனுடைய உணவு முறையையும் அது தன் பங்கிற்கு மாற்றியமைத்தது. உணவானது ஒப்பீட்டளவில் சுவையானதாகவும், நோய்த் தொற்று குறைந்ததாகவும், இலகுவில் சீரணிக்க கூடியதாக வும் மாற்றப்பட்டது. ஏனைய உயிரினங்களின் உணவுடன் ஒப்பிடுகையில் மனிதனின் உணவு நெருப்பின் பயன்பாட்டு டன் புரட்சிகர மாற்றம் பெற்றது. இயற்கையில் உண்ணத்தயாராய் இருந்தவற்றை அப்படியே நுகரும் விலங்குகளின் வழமையில் இருந்து அவன் மாறிச் சென்றதும் இத்தருணத் தில் தான் நிகழ்ந்தது.

பாதுகாப்புக்காக மரங்களில் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்து மனிதனை தரை வாழ்விற்கு இறக்கிய முக்கிய சாதனங்களில் அக்கினி பிரதானமானது. நெருப்புடன் கூடிய மனிதனை ஏனைய பிராணிகள் அணுகமாட்டாது என்பதால் நெருப்பு தரையில் வாழும் மனிதனுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமானது. அதாவது அரைகுறையாக மரங்களில் வாழ்ந்த வாழ்க்கையில் இருந்து மாற்றி, அக்கினிதான் மனிதனை தரையுடன் நெருக்கமாய்ப் பிணைத்தது. அக்கினி இயற்கையின் உடலியல் பராக்கிரம சமநிலையில் மேலும் தீர்க்கமானதொரு உடைப்பினை ஏற்படுத்தியது. அத்துடன் மனித குலத்தின் பல இலட்சக் கணக்கான ஆண்டுகால வரலாற்றில் இல்லாதிருந்த வேலைப்பிரிவினை என்றோர் அம்சத்தையும் அக்கினியே தொடக்கி வைத்தது. ஏனெனில் இந்த நாட்களில் மனிதனுக்கு நெருப்பைப் பிரயோகிக்க தெரியுமே தவிர அதனை உற்பத்தி செய்யத் தெரியாது. இதனால் நெருப்பை சதா காலமும் அணையாமல் பாதுகாக்க வேண்டியிருந்தது. இது நிலையான இலட்சக்கணக் கான ஆண்டுகளாய் நிலவி வந்த குழுவின் இயக்கப் போக்கை மாற்றியமைத்தது. அதாவது குழுவினர் அனைவரும் சேகரிப்போராயும், வேட்டைக்காரராயும் திரிய முடியவில்லை. குழுவினரின் ஒரு பகுதியினர் நெருப்பைப் பாதுகாக்கும் பணியில் அதாவது மனித குலத்தின் முதல் வேலைப் பிரிவினையில் ஈடுபட்டார்கள்.

மனிதன் இதுவரை காலமும் தான் கண்டு அஞ்சிய இயற்கையின் ஓர் அம்சமாகிய அக்கினியை – ஒரு சக்தியை –கையில் எடுத்துக் கொண்டான்.

மனித குலத்தின் முன்னேற்றத்தில் அக்கினிக்கு அளப்பரிய முக்கியத்துவம் உண்டு. அதனால்தான் மனிதனின் பாரம்பரிய வாழ்வில் அக்கினி வழிபாட்டிற்குரியதாக இருக்கின்றது. அத்துடன் பிற்காலப்புராண, இதிகாசங்களில் அது ஒரு தெய்வமாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. உண்மையில் ஒரு சக்திப் பொருளாகிய நெருப்பை உபயோகிக்கக் கற்றுக் கொண்டதன் மூலம் மனிதன் தனது ஆற்றலையும், சக்தியையும் பிரமாண்டமான அளவிற்குப் பெருக்கிக் கொண்டான்.

அக்கினியைப் பிரயோகிக்கக் கற்றுக் கொண்ட பின்னும் மனிதன் அலைந்து திரிபவனாகவே வாழ்ந்தான். ஆயினும், அக்கினியின் துணையுடன் குறிப்பிட்டதோர் இடத்தில் தனக்கு வேண்டிய நேரம்வரை தரித்திருக்கக் கூடிய வாய்ப்பு அவனுக்குக் கிடைத்தது. முன்னரெல்லாம் உணவை அருந்திக் கொண்டிருக்கும் போதுகூட மிருகங்கள் வந்தால் தப்பியோட வேண்டியிருந்தது. ஆனால் அக்கினி எரியும் இடத்தை மிருகங்கள் அணுகமாட்டாது என்பதனால். ஒப்பீட்டு ரீதியில் இலட்சக் கணக்கான ஆண்டுகளாய் தொடர்ந்திருந்த பெரும் உள நெருக்கடியில் இருந்தும் அக்கினி மனிதனுக்கு விடுதலையளித்தது.

அக்கினி ஒரு வகையிலே தற்காலிகமாக குறித்த ஓரிடத்தில் தங்கும் ஆற்றலை மனிதனுக்கு வழங்கியது. அதாவது ஓரிடத்தில் குழுவின் சிலர் அக்கினியை அணையவிடாது பாதுகாத்துக் கொண்டிருக்க, ஏனையவர்கள் சேகரித்துக் கொண்டும், வேட்டையாடிக் கொண்டும், அக்கினியுள்ள இடத்திற்குத் திரும்பி வருவர். இதனால் வீடு என்னும் உணர்வின் முதற் கருவாகவும் அக்கினி அமைகின்றது. நீண்ட நேர அலைச்சலின் பின்னர் வேட்டையாடிய மிருகங்களையும், சேகரித்த பொருட்களையும் அக்கினியுள்ள இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்து, அவற்றை நெருப்பில் வாட்டும் போது ஆடிப்பாடி மகிழ்தலும் கூடவே இடம் பெறலாயிற்று.

**ஆக்கம் - ஆ. கிழவி.**



# பாபா ஒரு ஜோக்

மூன்று வருட இடைவெளிக்குப் பிறகு வெளிவரும் ரஜினி படம் என்பதால் பாபாவிற்கு பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் படம் வந்தவுடனேயே அந்த எதிர்பார்ப்புகளெல்லாம் பொசுங்கி விட்டன. திரையரங்கை விட்டு வெளியேறும் ஒவ்வொரு ரசிகனின் முகத்திலும் படம் பற்றிய அதிருப்தி ஒட்டிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

பொதுவாக ஆழமான கதையம்சம் ரஜினி படங்களில் இருப்பதில்லைதான். ஆனால் பாபாவில் ஏதோ ஒரு 'அம்புலிமாமாக்' கதையைக் குழப்பியடித்துத் தந்திருக்கிறார்கள். இதுவரை வெளிவந்த ரஜினி படங்களிலேயே மோசமான படம் இதுதானென்று தமிழகப் பத்திரிகைகள் விமர்சனக் கணைகளை அள்ளி வீசி வருகின்றன.

ரஜினி தன்னுடைய பாத்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி 'குளோசப்பில் தோன்றுதல்' மற்றைய பாத்திரங்களை ஓரங்கட்டுதல், மணிக்கணக்கில் தத்துவங்களை உதிர்த்தல், என்று படம் முழுவதையும் ஆக்கிரமித்திருக்கும் தன்மை நல்லதொரு விவரணப் படத்திற்கு வேண்டுமானால் பொருத்தமாயிருக்கும். ஆனால் நல்ல திரைப்படத்திற்கு ஆரோக்கியமற்றதென்றே கூற வேண்டும். ஜப்பான் நடிகை, சங்கவி, ரம்யகிருஷ்ணன் மனிஷா கொய்ராலா என எல்லா நடிகைகளும் ஒப்புக்கு தங்கள் முகங்களை இடையிடையே காட்டுகிறார்களே தவிர மற்றபடி வீணடிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று கூறுவதே பொருத்தமானது.

ஒருகாலத்துத் திணிப்பு முயற்சியும் ''பாபா'' வில் காணப்படு கின்றது. ரஜினிகாந்த் என்கின்ற தனி மனிதனுக்கு வேண்டுமானால் ஆன்மீகத் தில் அளவுகடந்த ஈடுபாடு இருக்கலாம். ஆனால்

அதையே தன்னுடைய படத்தின் ஊடாகப் பார்வையாளிடம் திணிக்க முற்படுகின்றாரோ என்று சிந்திக்க வேண்டியிருக் கிறது. அத்தோடு பாபா படத்தினை முற்றுமுழுதான ஆன்மீகப் படம் என்றும் கூற முடியாது. ஏனெனில் படம் முழுவதும் அரசியல் வாடை வீசிக் கொண்டேயிருக்கிறது.

குப்பைக்குள்ளும் குண்டுமணி இருப்பது போல் வில்லனாக வரும் ஆஸிஷ் வித்தியார்த்தியின் நடிப்பு மட்டும் நெஞ்சில் நிற்கின்றது. கொஞ் சம் மிகையாகவே நடித்திருந் தாலும் கூட அவரின் நடிப்பை ரசிக்க முடிகின்றது.

இசையைப் பொறுத்தவரை ரஜினியைப் போலவே A.R. ரஹ்மானும் ஏமாற்றிவிட்டார். ''மாயா, மாயா'' ''ராஜ்ஜியமா..'' என்ற இரு பாடல்களும்தான் ஓரளவு கேட்ககக் கூடியதாக இருக்கின்றது.

பாபா படம் இல்லாது மோசமான நிலையை அடைவ தற்கு ரஜினி மட்டுமல்லாது இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா வும் பொறுப்பேற்க வேண்டியவ ராக உள்ளார். ஏனெனில் சீரான இயக்கத்திறனை படத்தில் காணவேயில்லை. பாபா படத்தின் சில காட்சிகளும், கமெரா இயங்கும் விதமும் கொம்பியூட்ட கிராபிக்ஸ்சும் ஆளவந்தானை நினைப்பூட்டு கின்றன. சுரேஷ் கிருஷ்ணா ஆளவந்தான் தோல்விக்குப் பின்னருங் கூட - சூடுகண்ட பின்னரும் அடுப்படிக்குச் செல்லும் பூனையாக ஆளவந்தானில் பயன்படுத்திய தொழிநுட்ப மாலையில் இருந்தது. இன்னமும் மீள வில்லை என்பதையே இது காட்டுகின்றது.

படக்கதை, திரைக்கதை - ரஜினிகாந்த் என்று அறிவித் திருந்தார்கள். ஆனால் படம் தொடங்கியது முதல் முடிவு வரை ரஜினியைத் தவிர மற்றவை எவையையும் காணமுடியவில்லை. இறுதி யாக பாபா படத்தை நடித்த தைக் காட்டிலும் ரஜினி படம் நடிக்காமலே விட்டிருந்தால், இப்படி குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்ட நிலையை அவர் சந்தித்திருப்பதைத் தவிர்த்திருக கலாம்.

**ஆசிரியர் குறிப்பு:-**

எமது வான்முழக்கம் சஞ்சிகையில் சினிமாவிற்கு எச்சந்தர்ப்பத்திலும் முக்கியத்துவம் கொடுக்காதபோதும் ரசிகர்களை ஏமாளிகள போல ரஜனி கருதியமையின் வெளிப்பாடாக இப்படம் இருப்பதால் இப்படத்தின் விமர்சனத்தை பல வாசகர்கள் எழுதி அனுப்பியுள்ள போதும் ஒரு வாசகரின் விமர்சனத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். பாபா திரைப்பட விமர்சனம் இம்முறை வருவதால் கல்லூரி மாணவர் காதலிக்கலாமா என்ற விவாத தொடர் இவ்விதழில் தவிர்க்கப்பட்டுள்ளது.

(ஆ-ர்)

# பொங்குதமிழ் எழுச்சி கண்டு புதைகுழியிலிருந்து ஒரு மடலுக்கு பதில் மடல் . . . . . . . .



To :-

**செம்மணியில்**

**புதைகுழியில் புதையுண்டாலும்**

**உணர்வுகளுக்காய்**

**உயிருடன் இருப்பவர்களுக்கு**

சர்வதேசத்தின் ஆய்வுப் பொருளாகி

புதைகுழியில் புதையுண்டு

போனவர்களே!

புதையுண்டு போகாத

உங்கள் சுமையான நினைவுகளை

சுமக்க முடியாமல் நாம்

ஆனாலும்

மௌனங்களால் அழுதழுது

மயானத்தை ரசித்த நாம்

உக்கிப்போன பின்னரும்

உணர்வுகளோடு உயிர்த்தெழுந்து

தமிழினத்துக்கு விலாசமிட்ட

தங்களின் உணர்வலைகளால்

தகர்க்கப்பட்ட எம்மௌனம்

பொங்கி எழ வைத்தது

எக்காளமிடுகிறது ஈழமண் என்று

எதிரி எரிமலையாகின்றான்

இது செங்குருதி பாய்ந்த

சிவந்த மண்

கனவுகளின் கல்லறையில் தான்

எம் ஆத்மா

வாழ்வின் வாசகங்களை

வாசித்து பார்த்தது

இப்போதெல்லாம்

நிதர்சன நிழலில் இளைப்பாற

துடிக்கிறது தமிழினம்

தமிழன்னை பெற்றெடுத்த

மைந்தர்கள் நாம்

தரணியிலே தமிழனாக

நிமிர்ந்து நிற்போம்

அத்துடன் உங்கள்

கனவான நினைவுகளை

நனவாக்க என்றும் பொங்கிவரும்

தமிழினம்


From :-

**தலைநிமிர்ந்து நிற்கும்**

**தமிழினம்**

## வான்முழக்கம் நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை

# சோதனை



காவல்காரர் எதிரில் நிற்க
ஏவல் காரன் போலிவன் நிற்க
ஆவல் கொண்டு அவர்கள் பார்க்க
கேவலம் தமிழன் குனிகின்றான்

உடையில் வெள்ளை இருந்தாலும்
அடையாள அட்டை காட்டாது
நடையை கட்ட முடியாது
படையினரிடமே இருக்கின்றான்.

கெதியாய் பள்ளி செல்வதற்கு
கதியாய் வந்த மாணவனை
பதிவால் அவனை
மினைக்கெடுத்தி
சதியாய் வேலை நடக்கிறது.

நேரம் விரைவாய் ஓடிடவே
தாரும் விரைவாய் என மனதுள்
கோரும் தமிழன் தாகத்தை
பாரம் எடுப்பார் யார்தானோ?

ஆக்கம் : **வைர.வசீகரன்**
கணிதப் பிரிவு ( 004)
யா விக்னேஸ்வராக் கல்லூரி.
கரவெட்டி.

---

**வான்முழக்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் பங்குபற்றி பரிசு பெறுவோர் விபரம்**

முதலாம் இடம் :-
**வைர.வசீகரன்**
கணிதப் பிரிவு (2004).
யாழ் விக்னேஸ்வராக் கல்லூரி. கரவெட்டி.

இரண்டாம் இடம் :-
**ந.பிரியந்தி,**
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

மூன்றாம் இடம் :-
**கு.நந்தன்**
வாரிவளவு. காரைநகர்.

# வான்முழக்கம் நடத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கவிதை

# அன்னியனே!

பதிவுகள் ஏன்
பாதைகள் திறந்தாச்சு
பிரிவுகள் ஏன்
சமத்துவம் ஒன்றாச்சு
எதற்காக இன்று
உன் சொந்த இடம்
இழந்து வந்து
தமிழன் மண்ணில்
நின்று கொண்டு
இத்தனை பதிவுகள்!

அன்று அன்னை மடியில்
தவழ்ந்த சிட்டாய்
இன்றோ பள்ளிப் பாலகனாகி
கல்லூரி வாழ்க்கையை
காணப்போகும் நேரத்திலா
என் அண்ணனுக்கு
இத்தனை கொடுமை
மத்தியிலும் பதிவுகள்!

அன்றல்லா பல பிரதி எடுத்தாய் -
ஏன்
தமிழன் கரம் அறிந்துதானே?
இன்றும் தான் உனக்கு
சந்தேகம் மறையவில்லை
ஒப்பந்தம் சரி வந்தாலும்
உனக்கு துணிச்சல் வராதுடா!

இதுதானா உங்க வீரம்
நீ பேனா முனையால்
எதைத் தேய்த்தாலும் - என்
அண்ணன் தன் கரத்தை
சோர்வடைய விடமாட்டான்
அன்று நீ எம்மண்ணில்
கால் வைத்தும் இன்றுவரை
எதைத்தான் புரிந்தாயோ
நான் அறியேன்!

என்றாலும் நீ என்ன
கொடுமை செய்தாலும்
கல்வி முதல் ஆயுதம்வரை
போராடும் வலிமை
எனக்கும் என் அண்ணனுக்கும் உண்டு
அதை மறந்து நடவாதே!!!

கவி ஆக்கம்:
**ந.பிரியந்தி,**
சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

# பொது அறிவுத் துளிகள்

*01.* தேயிலை ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
தலவாக்கொல்லை.

*02.* இலங்கையின் செயற்கை துறைமுகம் எது?
கொழும்பு.

*03.* இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எது?
திருகோணமலை.

*04.* சூரியன் உதிக்காத நாடு எது?
ஜப்பான்.

*05.* நடு இரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
நோர்வே.

*06.* குதிரைகள் இலங்கையில் எங்குள்ளது?
மன்னார்.

*07.* பாடும் மீன்கள் எங்குள்ளது?
மட்டக்களப்பு.

*08.* உலகிலேயே அதிக பூகம்பம் ஏற்படும் நாடு எது?
மெக்சிக்கோ.

*09.* தலதா மாளிகை இலங்கையில் எங்குள்ளது?
கண்டி.

*10.* இரத்தினக் கற்கள் இலங்கையில் எங்கு கிடைக்கும்?
இரத்தினபுரி.

*11.* இசைத்துறையில் இன்று பிரதான இடத்தைப் பிடித்திருப்பது?
வயலின்.

*12.* உலகில் பொழுது போக்குகளில் முதலிடம் பெறுவது?
தோட்டக்கலை.

*13.* தோடம்பழத்தின் பிறப்பிடம் எது?
மலேசியா.

*14.* சர்வதேச புத்தகத் தினம் யாது?
ஏப்ரல் 23.

*15.* கொசோவாவின் தலைநகரம் என்ன?
பிரிஸ்டினா.

*16.* உலகிலேயே அதிக பால் உற்பத்தி செய்யும் நாடு எது?
இந்தியா.

*17.* முதன் முதலில் நிலக்கரியைப் பயன் படுத்தியவர்கள் யார்?
சீனர்கள்.

*18.* இரு மகாராணியர்களைக் கொண்டுள்ள நாடு எது?
ஜோர்தான்.

*19.* நின்றபடியே தூங்கும் உயிரினம் எது?
குதிரை.

*20.* உலகில் மிகவும் கனமான பொருள் யாது?
யுரேனியம்.

**அ.யோ.நிஷாந்தினி,**
A/L, 2003 (கலை).

---

*1.* முதன் முதலில் குளோனிங் மூலம் பிறந்த ஆட்டுக்குட்டியின் பெயர் என்ன?
டோலி

2. IRA என்னும் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் யார்?
ஜெரி அடம்ஸ்

3. BOAC விமான சேவை எந்த நாட்டிற்கு சொந்தமானது?
நிக்கோடின்

4. CIH என்று அழைக்கப்படும் கணனி வைரசினை பரவவிட்ட நபரின் பெயர் என்ன?
சென்

5. கண் பார்வையற்றவர்கள் கல்வி கற்பதற்கான முறையினை கண்டுபிடித்தவர் யார்?
லூயி பிரேய்லி

6. X – Ray கதிர்களை கண்டு பிடித்தவர் யார்?
Rontgen

7. அணுவைப் பிளக்க உதவும் கருவியின் பெயர் என்ன?
சைக்னோட்ரான்

8. புவி நடுக்கத்தினை அளக்கும் கருவியின் பெயர் என்ன?
செயிஸ்மோகிறாவ் Scismograph

9. அறிவு வளர்ச்சி அதிகம் உள்ள கடல்வாழ் பிராணி எது?
டொல்பின்

10. இன்ரநெற் தகவல் தொடர்பு முறையில் ஆங்கிலத்தில் www என சுருக்கமாகக் குறிப்பிடப்படும் எழுத்தின் பொருள் என்ன?
World wide web

11. கம்பியூட்டர் விற்பனையில் உலகில் முன்னணி வகிக்கும் பிரபல்யமான அமெரிக்க Company எது?
IBM

**மெய்யழகன் தனேசன்**
98/2 சட்டநாதர் வீதி,
நாவலர் கல்வி நிலையம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

---

# வான்முழக்க உறவுப்பால முகவர்கள்

வான்முழக்கம் ஒவ்வொரு பாடசாலையுடனும் உறவுப் பாலம் அமைத்து வருகிறது. இந்த உறவுப் பாலத்தை இலகுவாக்க ஒவ்வொரு பாடசாலையிலும் வான்முழக்க உறவுப்பால முகவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்கள் ஊடாக வான்முழக்கத்துடன் நீங்கள் இல்குவாக உறவுப்பாலம் அமைக்க முடியும்.

1. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி உறவுப்பால முகவர்கள்
   (i) சிவராசா – கரன்
   உயர்தரம் விஞ்ஞானப் பிரிவு.
   (ii) செல்வமனோகரன் – பிரதீபா
   உயர்தரம் கலைப்பிரிவு.

2. யாழ் வதிரி திரு இருதயக் கல்லூரி உறவுப்பால முகவர்
   இருதயநாதன் – இதயகுமார்
   (தரம் - 11)

3. யாழ் / வட இந்து மகளீர் கல்லூரி உறவுப்பால முகவர்
   பிரியா திரிலோகநாதன்
   உயர்தரம் வணிகத்துறை.

## வான்முழக்கம் உங்களையும் சந்தாதாரர் ஆக்க விரும்புகிறது.

1. வான்முழக்கத்தில் சந்தாதாரர் ஆவோரிற்கு சுழற்சி முறையில் இலவச கணனி பயிற்சி வழங்கப்படும்.
2. 2003ம் ஆண்டுவரை சந்தாதாரர் ஆவதற்கு 500 ரூபா மட்டுமே.

1. பெயர் :-............................................................

2. முகவரி :-..........................,.................................

**நான் சந்தாதாரர் ஆக விரும்புகிறேன்.**

..................................
கையொப்பம்

சமாதானம் நிலவும் இந்த வேளையில்
உல்லாசமாக மகிழ்ச்சியாக உங்கள் பொழுதைக்
கழிக்க வேண்டுமா? அல்லது தென்பகுதிக்கு செல்ல வேண்டுமா?

கவலையை விடுங்கள்

**R.B.Booking Centre** ஐ நாடுங்கள்



இங்கு யாழ், கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை,
கண்டி போன்ற இடங்களிற்கு ஆசனப் பதிவு செய்யப்படும்.

**ஆர்.பி.(B)பஸ் ஆசனப் பதிவகம்**

15, Grand Bazaar,
Jaffna.

அரச அங்கீகாரம்
பெற்ற நிறுவனம்

வைரவர் கோயிலடி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.



வெய்யில் கொடுமை வாட்டுகிறதா? அல்லது
நண்பர்களை, நண்பிகளை மகிழ்விக்க ஆசைப்படுகிறீர்களா? அல்லது
மங்கலகரமான நிகழ்வை மகிழ்விக்க முடியவில்லை என்று கவலைப்படுகிறீர்களா?

வடமராட்சியில் இதற்கு விடைகாண விரையுங்கள்



**யோகாஸ் கிறீம் ஹவுஸ்**



**YOGAS CREAM HOUSE**

கந்த முருகேசனார் சிலையடி,
மந்திகை, பருத்தித்துறை.

Near Kanthamurugesanar
Statue - Manthigai.



உங்கள் நண்பர்கள், காதலனை, காதலியை உங்கள் பிள்ளைகளை அல்லது
உங்கள் உறவுகளை ஒரு தடவையாவதுமகிழ்விக்கவேண்டாமா?
இதற்கா நேரத்தை செலவழித்து ஐடியா போடுகிறீர்கள்

நீங்கள் **ஐடியல் கிறீம் ஹவுஸ்** இற்கு


ஒரு தடவை விரைந்தால் மறுபடியும் விரையச் சொல்லும்.
இதுதான் நாங்கள் தரும் ஐடியா.
மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க யாழ் நகரில் அனைவரும் தற்போது நாடுவது

**IDEAL CREAM HOUSE**

458, Hospital Road,
Jaffna.

நா இனிக்க நினைவில் வைத்திருங்கள்
ஐடியல் கிறீம் ஹவுஸ்

மிலேனியம் ஆண்டில்
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் நியாயமாக நிதான விலையில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டியது




# விதுர்ஷிகா நகையகம்

## VITHURSHIKA NAGAI AGKAM

**யாழ் நகரில் தங்கப்பவுண் நகை வியாபாரத்தின் முன்னோடிகள்**
**மங்கையரின் மனதை குளிர வைப்பது**
**விதுர்ஷிகா நகையகம்**
**115B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

மிகவும் குறைந்த செலவில்
உங்கள் வீடுகளில் இடம்பெறும் மங்களகரமான நிகழ்வுகளை குறித்த
தினத்தில் நவீன டிஜிற்றல் புகைப்படக் கருவி மூலம் படம் பிடிக்கவும்
V.D.O படம் எடுக்கவும் அடுத்த நிமிடமே, வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகள்
உங்கள் வீட்டில் நடப்பவற்றை நேரடியாகக் காணவைப்போம். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது
021 உ 3533 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் போதும்.



**இதற்கு பலாலி வீதியில் உள்ள**
**யாழ் தொலைத்தொடர்பகத்திற்கு சென்றால்**
**மனநிறைவுதான்.**

**தொடர்புகளிற்கு :~ வே. தவச்செல்வம்** T.P. 3533

**284. பலாலி வீதி. கந்தர்மடம். யாழ்ப்பாணம்.**